1972 ஆகஸ்ட் 10]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசு இவ்வளவு இடங்களைக் கொடுத்திருந்தும் பத்திரிகைகளிலே மத்திய அமைச்சர்கள் கூறியதாக வருகிற செய்திகளைப் பார்க்கிறபொழுது, நம்முடைய மாநில அரசு நிலம் கொடுக்காத காரணத்தினால் தாமதப்படுவது போலவும், வேறு பல காரணங்கள் இருப்பது போலவும் கூறியிருக்கிறார்களே, அப்படி யில்லை என்பதற்கு விளக்கம் தருகின்ற முறையில்,—இன்னும் அவர்கள் கேட்ட இடங்களைக் கொடுக்காமல் இருப்பதுபோல் கூறியிருக்கிறார்களே—அது உடனடி யாக நிவர்த்திக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இவ்வளவு அதிகமான நிலங்களை எடுத்துக் கொடுத்திருக்கும்பொழுது மத்திய அரசோ அல்லது அதனுடைய அமைச்சர்களோ நிலமே இல்லை, ஒரு செண்டுகூட நிலம் இல்லை என்று சொல்வார்கள் என்று நான் நம்பவில்லை. அப்படி மத்திய அமைச்சர்கள் அல்லது மத்திய அரசு பேசுகிறார்களோ என்ற நோக்கத்தோடு பத்திரிகை களில் போடாமல் இருந்துவிட்டால் இப்படிப்பட்ட பிரச்னை எழாது என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்தவரையில், எந்த மத்திய அமைச்சரும் மாநில அரசு எதுவும் செய்யவில்லை என்று சொல்லியிருப்பார்கள் என்று நம்பத் தயாராக இல்லை.

தொழில் அனுமதிக்கான விண்ணப்பங்கள்

* 43 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 வரை லைசென்ஸ் வழங்கப்படாமல் மத்திய அரசு கால தாமதம் செய்யும் தொழில்கள் எத்தனை?

(இ) அவைகளின் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 165 விண்ணப்பங்கள் 1971-ம் ஆண்டு வரை மத்திய அரசால் உரிமம்/இசைவுக் கடிதங்கள் வழங்கப்படாமல் உள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 1971-ம் ஆண்டுக்குப் பிறகு இதுவரை அவைகளில் எத்தனை அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாமா?

---

@ 244–248 -ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 1971-ம் ஆண்டுக்கான விவரங்கள் இருக்கின்றன. வழங்கப்பட்ட லைசென்ஸ் 53, இசைவுக் கடிதம் (லெட்டர்ஸ் ஆஃப் இண்டெண்டு) 71.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாய் வரையில் முதல் முடக்கும் தொழில்களுக்கு மத்திய அரசின் அனுமதி தேவையில்லை என்று கூறப்படுகிறதே? ஆகவே எத்தனை லைசென்ஸ்கள் இந்த அரசாங்கம் வழங்கியுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒரு கோடி ரூபாய் முதல் வரையில் லைசென்ஸ் தேவையில்லை என்றால் மறுபடியும் லைசென்ஸ் வாங்கவேண்டும் என்று ஏன் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு கோடி முதலீடு போட்டாலும், அதில் வெளி நாட்டுத் தொழில் நுட்ப உதவி, வெளி நாட்டிலிருந்து இறக்குமதி ஆகியவற்றிற்கான விவரங்களும் இணைந்திருந்தால் அதற்கும் அனுமதி வாங்கவேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன்:** 1971 வரையிலும் வழங்கப்பட்ட அனுமதியைப் பொறுத்தவரையில் எவ்வளவு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கின்றன. இன்னும் எவ்வளவு பாக்கி இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்த விவரம் என்னிடம் இல்லை.

### சிறு தொழில்களுக்குத் தேவையான இரும்பு

*44 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-72-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தின் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்க்காகத் தேவைப்பட்ட இரும்பின் அளவு என்ன?

(இ) அதில் மத்திய சர்க்கார் அனுமதித்துள்ள அளவு என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) 1971-72-ம் ஆண்டில் நமது மாநிலத்தின் சிறு ரகத் தொழில்களுக்குத் தேவைப்பட்ட இரும்பின் அளவு சுமார் இரண்டு லட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும்.

(இ) அதில் மத்திய அரசின் விநியோக முறைப்படி அனுமதித்த இரும்பின் அளவு சுமார் 25,425 மெட்ரிக் டன்கள் ஆகும்.